

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்(DT
நாமக்கல்
இராசிபுரம் நகராட்சி

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம்/ நகராட்சி, வார்டு நகரளவை எண்-106/15-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்/திட்டமிட்ட பகுதி

அளவு : 1:400 (அ) 1"=33'0"
கோப்பு எண் : NKL/OCKFR6CW/23098/2024
இணையதள விண்ணப்ப எண் : OCKFR6CW




I குறிப்பு

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.40 ஏக்கர் (அ) 5669.00 சதுரமீ
சாலையின் மொத்தப்பரப்பு : 1881.45 சதுரமீ
கோரிய மனைகள் : 28
ஒதுக்கிய மனைகள் : 28
மனைப்பிரிவு எல்லை
உத்தேச சாலை
நிலையில் உள்ள சாலை

II பொது ஒதுக்கீடுகள் :

1.பூங்காவிற்கான பரப்பு : அரசாணை எண்.18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

சாலை எண் ①-① : 95.85 சதுரமீ சாலை எண் ④-④ : 478.80 சதுரமீ
சாலை எண் ②-② : 804.60 சதுரமீ சாலை எண் ⑤-⑤ : 108.00 சதுரமீ
சாலை எண் ③-③ : 385.20 சதுரமீ 1.5x1.5 மூலை முடக்கு 08 எண்ணம் : 9.00 சதுரமீ

1.சாலையின் மொத்தபரப்பு (மூலை முடக்கு உட்பட) :1881.45 சதுரமீ (33.18%)
2.மின்பகிர்மானம் : 19.35 சதுரமீ (0.51%)
3.பொது உபயோகம் : 19.36சதுரமீ (0.51%)
மூலை முடக்கு : 12மீ அகல சாலை வரை 1.5மீx 1.5மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019-ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர், அவர்களால் திரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குள்ளான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வனையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்புர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில்கிரயப்பத்திரம் குத்தகை பத்திரம்பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வாரிசு வழியாக மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வாரிசு வழியாக உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
   சொத்தின் வாரிசு விருமாறு எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூன் நீர்த்துக்கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு தொழுவாயில்/ 6மீ அகலமான நீர்நது தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகசிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அனையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையில் மனைப்பிரிவு அனுமதி செல்லுத்தக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் செல்லுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனை உட்பிரிவு இடத்தில் கட்டடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனை உட்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
இராசிபுரம் நகராட்சி.
ந.க.எண்: 1699/2024/F, நாள் -31-7-2024, இந்நகல் மனு தீர்மான எண்: 590, நாள் 26-7-2024-ன்படி உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையரின்
இராசிபுரம் நகராட்சி
31/7/2024

SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO :95/2024

தே.புவனேஸ்வரி,
அளவர் / உதவி வரைவாளர்

Signature valid
Signed by: Assistant Director
Location: Namakkal
Date: 2024.08.10

செ.சந்தியா,
வரைவாளர் நிலை-III

பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.